பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
20 07 2024 6 30
சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. தமிழகத்தில் மின் கட்டணம், சொத்துவரி, பத்திரப்பதிவு கட்டணம் போன்றவற்றை உயர்த்தி திமுக அரசு மக்கள் மீது பெரும் சுமையை ஏற்படுத்தி உள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.
2. நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை மற்றும் நிவாரண பணிகள் குறித்து முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று ஆய்வு நடத்தினார்.
3. உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளில் இதுவரை இரண்டாயிரம் தீர்ப்புகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதாக உச்சநீதிமன்றதலைமை நீதிபதி திரு சந்திரசூட் தெரிவித்துள்ளார்.
4. காவரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையை அடுத்து மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 69 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.
5. 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் ரோஹித் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள் ----</u>

**[]<<<>>>[]**

தமிழகத்தில் மின் கட்டண உயர்வை திரும்பப்பெற வேண்டுமென்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சொத்துவரி, நிலவரி, பத்திரப்பதிவு வரி போன்றவற்றை உயர்த்தி திமுக அரசு மக்கள் மீது பெரும் சுமையை ஏற்படுத்தி இருப்பதாகக் குற்றம்சாட்டினார்.

<u>*( சவண்ட்பைட் - முருகன் - 1) --36---- செகண்ட்*</u>

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை மிகவும் சீர்கெட்டு விட்டதாகவும், மாநில அரசு செயலிழந்து விட்டதாகவும் மத்திய இணை அமைச்சர் திரு எல் முருகன் கூறினார்.

<u>*( சவுண்ட்பைட் - முருகன் - 2 ) --42---- செகண்ட்*</u>

முன்னதாக திருப்பூர் மாவட்டம் அவிநாசியில் கடந்த மக்களவைத் தேர்தலில் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய திரு எல் முருகன், பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு கடந்த மக்களவைத் தேர்தலில் வெற்றிபெற்றது ஒரு சரித்திர நிகழ்வு என்று குறிப்பிட்டார்.

கடந்த பத்து ஆண்டுகளாக நாட்டின் வளர்ச்சிக்காகவும், விவசாயிகள், மற்றும் மகளிரின் மேம்பாட்டிற்காகவும், ஏழை எளிய மக்களுக்காகவம் நிறைவேற்ற திட்டங்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் மக்கள் மூன்றாவது முறையாக அவர் பிரதமராகும் வாய்ப்பை அளித்திருப்பதாகத் தெரிவித்தார்.

அவிநாசி – அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்ற தமிழகத்தில் ஆளும் திமுக அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறிய அவர், இதனை செயல்பாட்டுக்குக் கொண்டுவர விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

அவிநாசி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப்பிரிவு மற்றும் இப்பகுதியில் ஜவுளிப்பூங்கா, தொழிற் பயிற்சி பூங்க அமைக்க மாநில அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.,

சேவூர் பகுதியில் அரசு பள்ளி அருகில் அமைந்துள்ள டாஸ்மாக் கடையை உடனடியாக அகற்ற மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் திரு எல் முருகன் வலியுறுத்தினார்.

**[]<<<>>>[]**

உச்சநீதிமன்ற தீர்ப்புகளை மாநில மொழிகளில் மக்களிடையே நேரடியாக கொண்டு சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சந்திரசூட் தெரிவித்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் 20-வது ஆண்டு நிறைவு விழாவை தொடங்கி வைத்து பேசிய அவர், உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளில் இதுவரை இரண்டாயிரம் தீர்ப்புகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு பதிவிடப்பட்டுள்ளதாகக் கூறினார்.

தமிழ் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் இடமாக மதுரை மாநகர் உள்ளதாகக் குறிப்பிட்ட அவர், அவ்வை பிராட்டியின் ஆத்திச்சூடியை மேற்கோள்காட்டி பேசினார்.

[]<<<>>>[]

நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், எடுக்கப்பட்டு வரும் மீட்பு நிவாரணப் பணிகள் குறித்தும் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று அதிகாரிகளுடன் சென்னை தலைமைச் செயலகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், அம்மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை குறித்து கடந்த மூன்று நாட்களாக, அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்டவர்களுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தொலைபேசி வாயிலாக வழங்கியதாக தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

நடப்பு நிதி ஆண்டில் 11-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மிதிவண்டி வழங்கும் திட்டத்தை மாநில அமைச்சர்கள் திரு மா சுப்ரமணியன், திரு ஆர். எஸ் கண்ணப்பன் ஆகியோர் இன்று சென்னையில் தொடங்கி வைத்தனர்.

நடப்பு கல்வி ஆண்டில் சுமார் 264 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் மற்றும் பகுதிவாரியாக நிதி உதவிபெறும் பள்ளிகளில் 11-ஆம் வகுப்பு பயிலும் ஐந்து லட்சத்து 47 ஆயிரத்து 676 மாணவ மாணவியருக்கு மிதி வண்டிகள் வழங்கப்பட உள்ளன.

தொடக்கமாக சென்னை மேற்கு சைதாபேட்டையில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் பத்து மாணவர்களுக்கு அமைச்சர்கள் மிதிவண்டிகளை வழங்கினர்.

[]<<<>>>[]

மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் புதிய பேருந்துகளை மாநில அமைச்சர்கள் இன்று தொடங்கி வைத்தனர்.

திருப்பூரில் 19 வழித்தடங்களில் புதிய பேருந்துகளை மாநில அமைச்சர்கள் திரு மு பெ சாமிநாதனும், திருமதி கயல்விழியும் தொடங்கி வைத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படும் என்று திரு மு பெ சாமிநாதன் தெரிவித்தார்.

திருச்சியிலிருந்து பல்வேறு வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களுக்கு 11 புதிய பேருந்துகளை மாநில அமைச்சர்கள் திரு கே என் நேரு, திரு அன்பில் மகேஷ் பொய்யமொழி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் பழனியிலிருந்து தமிழக சுற்றுலா வளர்ச்சித்துறை சார்பில் திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு ஆன்மீக பயணத் திட்டம் இன்று தொடங்கப்பட்டது.

இதனை மாநில அமைச்சர் திரு சக்கரபாணி இன்று தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

கர்நாடகாவின் காவிரி நீர்பிடிப்புப் பகுதியில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அணையின் நீர்மட்டம் கடந்த 48 மணிநேரத்தில் 13 அடி உயர்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இன்று மாலை நிலவரப்படி அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 69 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 64 அடியை எட்டியுள்ளது.

இதனிடையே ஒகேனக்கல் காவிரி ஆற்றில் இன்று நீர்வரத்து 65 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து, தருமபுரி மாவட்ட ஆட்சியர் திருமதி சாந்தி, ஆற்றின் கரையோரப் பகுதிகளில் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் இருக்குமாறு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்,

**[]<<<>>>[]**

தூத்துக்குடியில் உள்ள தனியார் ஆலையில் அமோனியா வாயு கசிவு காரணமாக மூச்சுத்திணறல் ஏற்பட்டு 30 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் திரு லட்சுமிபதியின் உத்தரவின் பேரில், அம்மோனியா வாயு கசிவு ஏற்பட்ட ஆலையில் மாசு கட்டுப்பாட்டு வாரியம், சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகளும் ஆய்வு செய்து வருவதாக எமது செய்தியாளர் லஷ்மணன் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - லஷ்மணன் ) -30---- செகண்ட்*

**[]<<<>>>[]**

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் செஞ்சி ஆகிய இடங்களில் சுமார் 91 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடங்களை மாநில அமைச்சர் திரு செஞ்சி மஸ்தான் இன்று திறந்து வைத்தார்.

**[]<<<>>>[]**

ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிபாளையத்தில் நடைபெற்ற விதைகள் திருவிழாவில் பள்ளிக் கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**[]<<<>>>[]**

சிவகங்கை மாவட்டத்தில் வீட்டில் செல்லப்பிராணிகளை வளர்ப்போர் சம்பந்தப்பட்ட ஊராட்சி அமைப்புகளில் உரிய அனுமதிபெற வேண்டும் என்றும், 100 சதவீதம் தடுப்பூசி செலுத்துவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் அறிவுறுத்தியுள்ளார்.

**[]<<<>>>[]**

காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத், உத்திரமேரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

மயிலாடுதுறையிலிருந்து – திருச்சி செல்லக்கூடிய விரைவு ரயில் வாரத்தில் ஏழு நாட்களும் செயல்படக்கூடிய வகையில் இன்று முதல் அதன் சேவை தொடங்கியது.

**[]<<<>>>[]**

20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டி தாய்லாந்தின் **Sriracha-**வில் இன்று தொடங்கியது.
இந்தியாவின் ரோஹித் வெண்கலப்பதக்கம் வென்றார்.
87 கிலோ எடைப்பிரிவில் சீனாவின் **Jie wang**–ஐ வென்று பதக்கத்தை கைப்பற்றினார்.

**[]<<<>>>[]**

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sahaja Yamalapalli -** ஜப்பானின் **Hiroko Kwata** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

**End of News**